தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வலர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
NEWS
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009

ஆனந்த
# பாஸ்கர்
PRGI No: TNMUL/25/A1387
உதயத்தில் உங்களுடன் காலை நாளிதழ்
ANANDA BHASKAR
www.anandabhaskar.com

Advertise Your Business
MAKE YOUR BUSINESS KNOWN TO ALL

சென்னை மலர்: 01 இதழ்: 128 03.11.2025 திங்கட்கிழமை
Chennai Volume: 01 Issue: 128 Monday pages 4 Rs.5/-

## இன்றைய நாள்

திங்கட்கிழமை
(03–11–2025)
விசுவாவசு ஆண்டு, ஐப்பசி–14
பிறை: வளர்பிறை
திதி: திரேயாதசி இரவு 11.49 வரை பிறகு சதுர்த்தசி.
நட்சத்திரம்: உத்திரட்டாதி நண்பகல் 1.02 வரை பிறகு ரேவதி
யோகம்
சித்தயோகம்
ராகுகாலம்
நண்பகல் 7.30–9.00 மணி
எமகண்டம்
காலை 10.30–12.00 மணி.
சூலம் –கிழக்கு.
நல்ல நேரம் :
காலை 6–7 மணி.
மாலை 3–4 மணி.

| | |
|---|---|
| மேஷம் .................. | செலவு |
| ரிஷபம் .................. | தனம் |
| மிதுனம் .................. | வெற்றி |
| கடகம் .................. | தாமதம் |
| சிம்மம் .................. | ஆக்கம் |
| கன்னி .................. | ஓய்வு |
| துலாம் .................. | உற்சாகம் |
| விருச்சிகம் .............. | லாபம் |
| தனுசு .................. | வரவு |
| மகரம் .................. | நன்மை |
| கும்பம் .................. | உழைப்பு |
| மீனம் .................. | புகழ் |

# எஸ்.ஐ.ஆர். விவகாரம்; அனைத்து கட்சி கூட்டம் ஏன்? முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் விளக்கம்



**சென்னை, நவ.03:** பீகாரில் வருகிற 6, 11 ஆகிய நாட்களில் 2 கட்டங்களாக தேர்தல் நடைபெற உள்ளது. இதனை முன்னிட்டு பீகாரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதில், பல லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டது சர்ச்சையை ஏற்படுத்தியது. இதற்கு காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடுமையான எதிர்ப்பை தெரிவித்து இருந்தன. எனினும், நேர்மையான முறையில் பணிகள் நடந்துள்ளன என தேர்தல் ஆணையம் தரப்பில் விளக்கம் தரப்பட்டது.

தமிழ்நாடு உள்பட 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் இரண்டாம் கட்டமாக வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகள் மேற்கொள்ளப்படும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. தமிழகத்தில் நாளை மறுநாள் இதற்கான பணிகள் தொடங்கப்பட உள்ளன.

ஆனால், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் என்ற பெயரில் தமிழக மக்களின் வாக்குரிமையை பறிக்கும் சதி திட்டமிது என கூறி இதற்கு எதிராக போராடிட, முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் நவம்பர் 2-ந்தேதி அனைத்து கட்சி கூட்டம் நடைபெறும் என்று தி.மு.க. கூட்டணி கட்சிகள் அறிவித்தன.

இந்நிலையில், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகள் பங்கேற்கும் அனைத்து கட்சி கூட்டம் காலை 10 மணி அளவில், தியாகராய நகரில் உள்ள "ஓட்டல் அகார்டில்" தொடங்கியது.

எனினும், இந்த கூட்டத்தில் பங்கேற்காமல் விஜய் தலைமையிலான த.வெ.க. புறக்கணித்து உள்ளது. நாம் தமிழர், பா.ம.க. உள்ளிட்ட 20-க்கும் மேற்பட்ட கட்சிகளும் பங்கேற்கவில்லை. கூட்டத்திற்கு வருகை தந்த கட்சி தலைவர்களை முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலின் வரவேற்றார்.

இதன்பின்னர் கூட்டம் தொடங்கியது. கூட்டத்தில் பங்கேற்றிருந்த தலைவர்கள் முன்னிலையில் பேசிய முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலின் அனைத்து கட்சி கூட்டம் நடத்தப்படுவதன் அவசியம் பற்றி விளக்கி கூறினார். அவர் பேசும்போது,

பீகாரில், பொதுமக்களின் வாக்குரிமையை பறிக்கும் வகையிலும், அவர்களை அச்சுறுத்தும் விதத்திலும் வாக்களார் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகள் நடைபெற்றன. அதுபோல தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களிலும் நடைபெற உள்ளது.

இதற்கு எதிராக தமிழ்நாடு தனது எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டியது முக்கிய தேவையாக உள்ளது என பேசினார்.

நேர்மையான தேர்தல் நடத்த உண்மையான வாக்காளர் பட்டியல் அவசியம். இதனை யாரும் மறுக்கவில்லை. ஆனால் அதற்கு உரிய கால அவகாசம் கொடுக்கப்பட வேண்டும். அதனை விடுத்து தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன்பு முழுமையான திருத்த பணிகளை செய்ய நினைப்பது உண்மையான வாக்காளர்களை நீக்கும் தந்திரம் மட்டுமே என்று பேசியுள்ளார். அதனால், நம்முடைய எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டியது முக்கிய தேவையாக உள்ளது என்றும் பேசியுள்ளார்.

### S.I.R.–ஐ பயன்படுத்தி வாக்குகளை நீக்க முயற்சி: உதயநிதி

சென்னை தீவுத்திடல் அருகே மாரத்தான் ஓட்டப்போட்டியை துணை முதலமைச்சர் உதயநிதி கொடியசைத்து தொடங்கி வைத்தார். துணை முதல்வர் தொடங்கி வைத்த மாரத்தான் போட்டியில் பள்ளி, கல்லூரி மாணவர்கள், இளைஞர்கள் என 5,000-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

இதையடுத்து துணை முதலமைச்சர் உதயநிதி செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

* வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் மூலம் பா.ஜ.க.விற்கு பாதகமான வாக்குகளை நீக்க முயற்சி நடக்கிறது.

* பீகாரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் மூலமாக என்ன நடத்தப்பட்டது என்பது தெரியும்.

இவ்வாறு அவர் கூறினார்.

### வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தத்துக்கு எதிராக மம்தா தலைமையில் போராட்டம் அறிவிப்பு

பீகாரை தொடர்ந்து 2-ம் கட்டமாக தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா, மேற்கு வங்காளம் உள்பட 12 மாநிலங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்.ஐ.ஆர்.) பணிக்கு தேர்தல் கமிஷன் உத்தரவிட்டது. இந்த 4 மாநிலங்களிலும் அடுத்த ஆண்டு சட்டசபை தேர்தல் நடக்கிறது.

எஸ்.ஐ.ஆருக்கு காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்தன. இந்த நிலையில் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தத்துக்கு எதிராக மேற்கு வங்காள முதலமைச்சரும், திரிணாமுல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பானர்ஜி தலைமையில் வருகிற 4-ந்தேதி கொல்கத்தாவில் போராட்டம் நடக்கிறது.


கட்சியின் பொதுச் செயலாளரான அபிஷேக் பானர்ஜியும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்கிறார்.

இதற்கிடையே மேற்கு வங்காள தலைமை தேர்தல் அதிகாரிக்கு திரிணாமுல் காங்கிரஸ் புகார் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

மேற்கு வங்காள சட்டசபை எதிர்க்கட்சி தலைவரும், பா.ஜ.க தலைவருமான சுவேந்து, பூத் நிலை அதிகாரிகளுக்கு (பி.எல்.ஒ.) மிரட்டல் விடுப்பதாக குற்றம் சாட்டியுள்ளது.

# வங்கக்கடலில் உருவானது காற்றழுத்த தாழ்வு பகுதி

## வானிலை மையம் அறிவிப்பு



**சென்னை, நவ.03:** வங்கக்கடலில் வடகிழக்கு பருவமழை அக்டோபர் 16-ந்தேதி தொடங்கியது. தொடர்ந்து, பரவலாக மழை பெய்து வந்த நிலையில், வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வுநிலை பகுதி கடந்த அக்டோபர் 26-ந் தேதி புயலாக வலுப்பெற்றது.

'மோந்தா' என பெயரிடப்பட்டு இருந்த இந்த புயல் சென்னை அருகே கரையை கடக்கக்கூடும் என முதலில் எதிர்பார்க்கப்பட்டது.

எனினும், ஆந்திரா மாநிலம் காக்கிநாடா அருகே புயல் நகர்ந்து சென்றது. கடந்த அக்டோபர் 28-ந்தேதி மாலை 6 மணியளவில் காக்கிநாடா அருகே புயல் கரையை கடந்து சென்றது.

அப்போது ஆந்திராவின் கடலோர மாவட்டங்களில் 110 கி.மீ வேகத்தில் பலத்த காற்று வீசியது. மேலும் விடிய, விடிய இடி, மின்னலுடன் கனமழை பெய்தது. இதனால், தமிழகத்திற்கு பெரிய அளவில் மழை கிடைக்க பெறவில்லை. இந்நிலையில், வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகியுள்ளது என இந்திய வானிலை மையம் இன்று அறிவித்து உள்ளது.

தெற்கு மியான்மர் கடலோர பகுதிகள் மற்றும் வடக்கு அந்தமான் கடல் பகுதிக்கு மேல் காணப்படும் மேலடுக்கு சுழற்சியால் அந்தமான் மற்றும் நிகோபார் தீவு பகுதிகளில் இன்று கனமழை பெய்ய கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது மியான்மர் நோக்கி நகரும் என்றும் கூறப்படுகிறது. இதனால், தமிழகத்திற்கு மழை பாதிப்பு இருக்காது என்றும் கூறப்படுகிறது.

# நடுக்கடலில் ராமேசுவரம் மீனவர்களை துப்பாக்கி முனையில் விரட்டியடித்த இலங்கை கடற்படையினர்



**ராமேசுவரம், நவ.03:** வங்கக்கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தமிழகம் முழுவதும் கடந்த 2 வாரங்களாக பரவலாக நல்ல மழை பெய்தது. ஆந்திராவில் கரையை கடந்த மோன்தா புயல் காரணமாக மீனவர்கள் கடலுக்கு செல்ல தடை விதிக்கப்பட்டது. இதனால் ராமேசுவரம் மீனவர்கள் 10 நாட்களாக கடலுக்கு செல்லாமல் இருந்தனர்.

இதையடுத்து நேற்று முன்தினம் கடலுக்கு சென்ற மீனவர்கள் குறைந்த அளவு மீன்களுடன் கரை திரும்பினர். இந்தநிலையில் நேற்று காலை ராமேசுவரத்தில் இருந்து 500-க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் 2,500-க்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்துறை அலுவலக அனுமதியுடன் கடலுக்கு சென்றனர். அவர்கள் இந்திய கடல் எல்லையில் கச்சத்தீவு அருகே வலைகளை விரித்து மீன்பிடித்துக்கொண்டு இருந்தனர்.

இன்று அதிகாலை அந்த பகுதிக்கு இலங்கை கடற்படைக்கு சொந்தமான ரோந்து கப்பல் ஒன்று வந்தது. அதிலிருந்த வீரர்கள் ராமேசுவரம் மீனவர்களை பார்த்து இது எங்கள் நாட்டு எல்லை, இங்கு மீன்பிடிக்க அனுமதி கிடையாது என்று பலமுறை எச்சரித்தும் ஏன் வருகிறீர்கள்? என்று கூறியதுடன், அவர்களை நோக்கி துப்பாக்கியை காட்டி மிரட்டினர். அத்துடன் தொடர்ந்து அந்த பகுதியில் மீன்பிடிக்க விடாமல் தடுத்தனர்.

இதனால் அதிர்ச்சி அடைந்த மீனவர்கள் உடனடியாக கடலில் விரித்திருந்த வலைகளை சுருட்டிக் கொண்டு அங்கிருந்து புறப்பட தயாரானார்கள். ஆனாலும் நீண்ட தூரம் வரை ராமேசுவரம் மீனவர்கள் மீது கற்களை வீசியும், வலைகளை அறுத்து கடலில் வீசியும் துரத்தியடித்து அத்துமீறலில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் இலங்கை கடற்படைக்கு அஞ்சி ராமேசுவரம் மீனவர்கள் மீன் பிடிக்க முடியாமல் படகு ஒன்றுக்கு ரூ.10 ஆயிரத்திலிருந்து ரூ.50 ஆயிரம் வரை நஷ்டத்துடன் இன்று காலை கரை திரும்பி உள்ளனர்.

இதுகுறித்து மீனவர்கள் கூறுகையில், ராமேசுவரம் மீனவர்கள் மீது தொடர்ச்சியாக இலங்கை கடற்படை தாக்குதல் நடத்துவது, சிறை பிடிப்பது, விரட்டி அடிப்பது போன்ற சம்பவங்கள் தொடர்கதையாக உள்ளது.

இதனால் ராமேசுவரம் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு மீன்பிடி தொழில் நலிவடைந்து வருகிறது. இதை தடுக்க வேண்டிய மத்திய அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் இலங்கை அரசுடன் சேர்ந்து வேடிக்கை பார்த்து வருகிறது. இதனால் ராமேசுவரம் மீனவர்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு வருகின்றனர். எனவே ராமேசுவரம் மீனவர்கள் நலனை கருத்தில் கொண்டு இனி வரும் காலங்களில் பிரச்சனையின்றி மீன் பிடிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

# சத்தீஸ்கரில் பொற்காலம் தொடக்கம்: பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம்



**ராய்ப்பூர், நவ.03:** சத்தீஸ்கரில் பொற்காலம் தொடங்கியிருக்கிறது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

கடந்த 2000-ம் ஆண்டு நவம்பர் 1-ம் தேதி சத்தீஸ்கர் மாநிலம் உதயமானது. கடந்த 2005-ம் ஆண்டில் அந்த மாநில தலைநகர் ராய்ப்பூர் அருகே நயா ராய்ப்பூர் நகரம் உருவாக்கப்பட்டது. அங்கு 52 ஏக்கர் பரப்பளவில் ரூ.324 கோடி செலவில் பிரம்மாண்ட சட்டப்பேரவை கட்டப்பட்டு உள்ளது. புதிய சட்டப்பேரவையை பிரதமர் நரேந்திர மோடி நேற்று திறந்துவைத்தார்.

அப்போது அவர் பேசியதாவது: கடந்த 2000-ம் ஆண்டில் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் ஆட்சிக் காலத்தில் சத்தீஸ்கர் மாநிலம் உருவாக்கப்பட்டது. இன்று சத்தீஸ்கர் உதயமான தினம். இப்போது வெள்ளி விழாவை கொண்டாடுகிறோம். 25 ஆண்டுகளில் மாநிலம் அபாரவளர்ச்சி அடைந்திருக்கிறது. தற்போது சத்தீஸ்கரில் பொற்காலம் தொடங்கியிருக்கிறது. முன்னாள் முதல்வர் ரமண் சிங் ஆட்சிக் காலத்தில் மாநிலம் வளர்ச்சிப் பாதையில் அடியெடுத்து வைத்தது. இன்றைய முதல்வர் விஷ்ணு தியோ சாய் ஆட்சியில் மாநிலம் அதிவேகமாக வளர்ச்சி அடைந்து வருகிறது. மக்களே கடவுள் என்ற கொள்கையை பாஜக பின்பற்றுகிறது. பகவான் ராமர் சத்தீஸ்கரின் மருமகன் ஆவார். பகவானின் வழிகாட்டுதல்களின்படி சத்தீஸ்கரில் ராம ராஜ்ஜியம் நடைபெற்று வருகிறது.

சத்தீஸ்கரில் மவோயிஸ்ட் தீவிரவாதம் ஒடுக்கப்பட்டிருக்கிறது. இந்த மாநிலம் மட்டுமன்றி நாடு முழுவதும் மாவோயிஸ்ட், நக்சல் தீவிரவாதம் வேரறுக்கப்பட்டு வருகிறது. விரைவில் மாவோயிஸ்ட் தீவிரவாதம் இல்லாத இந்தியா உருவாகும். வரும் 2047-ம் ஆண்டில் வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்க இலக்கு நிர்ணயித்து இருக்கிறோம். இந்த இலக்கை எட்ட சத்தீஸ்கர் உறுதுணையாக இருக்கும். இவ்வாறு அவர் பேசினார்.

பின்னர் ராய்ப்பூரில் நடந்த விழாவில் ரூ.14,260 கோடி மதிப்பிலான பல்வேறு திட்டங்களை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார். சில திட்டங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டினார். அங்கு நடந்த விழாவில் அவர் பேசியதாவது: சத்தீஸ்கரில் இயற்கை வளங்கள் நிறைந்திருக்கிறது. இதன்காரணமாக மாநிலத்தின் தொழில் துறை அபார வளர்ச்சி அடைந்து வருகிறது.

நயா ராய்ப்பூரில் 9.75 ஏக்கர் பரப்பளவில் ரூ.50 கோடி செலவில் பழங்குடி சுதந்திர போராட்ட வீரர்களின் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டு உள்ளது. இது நாட்டின் முதல் டிஜிட்டல் பழங்குடியின அருங்காட்சியகம் ஆகும். இதனை பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார். பிரம்ம குமாரிகள் அமைப்பு சார்பில் நயா ராய்ப்பூரில் 1.5 ஏக்கரில் பிரம்மாண்ட தியான கூடம் கட்டப்பட்டு உள்ளது. அந்த தியான கூடத்தையும் பிரதமர் மோடி திறந்து வைத்தார்.

கடந்த 2012-ம் ஆண்டு முதல் நயா ராய்ப்பூரில் ஸ்ரீ சத்ய சாய் சஞ்சீவினி மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. அந்த மருத்துவமனையில் இதுவரை 37,000 குழந்தைகளுக்கு இலவசமாக இதய அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு உள்ளது. அங்கு அண்மையில் இதய அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட 2,500 குழந்தைகளுடன் பிரதமர் நரேந்திர மோடி நேற்று கலந்துரையாடினார்.

ADVERTISING
FOR ALL TYPES OF NOTICE ADS
Public Notice
Legal Notice
Tender Notice
Society Notice
Loss of Share
Merger
Acquisition
AFR, UFR, etc.
for just Rs. 249/- only in Daily Print Paper
ஆனந்த பாஸ்கர் 9337501889, 7789941009
Email: anandabhaskarnews@gmail.com

SEND AN EMAIL
WITH Hi
TO
tamilnaduepaper@gmail.com
RECEIVE OUR DAILY NEWSPAPERS & MAGAZINES

# 1 கோடி பேர் பெயர்களை நீக்கி தேர்தலை சீர்குலைக்க திட்டமிட்ட சதி

## திருமாவளவன் குற்றச்சாட்டு



**சென்னை, நவ.3:**

வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்பு திருத்தம் தொடர்பாக சென்னையில் நடந்த அனைத்துக்கட்சி கூட்டத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் பேசும்போது கூறியதாவது:-

பிற மாவட்டங்களுக்கும், பிற மாநிலங்களுக்கும் புலம் பெயர்ந்து சென்று வேலை செய்யும் தொழிலாளர்கள் தங்கள் பெயர்களை சேர்க்க பல நூறு அல்லது பல்லாயிரம் ரூபாய் செலவு செய்ய வேண்டி இருக்கும். அந்த அளவுக்குப் பணம் செலவு செய்து வாக்காளர் பட்டியலில் தனது பெயரைச் சேர்ப்பதற்கு அவர்கள் முயற்சி செய்வார்கள் என்று கூற முடியாது.பழங்குடி மக்கள் குறிப்பாக பழங்குடி இருளர், நரிக்குறவர் உள்ளிட்ட அலைந்து திரிந்து வாழும் பழங்குடி மக்கள் பலருக்குத் தேர்தல் ஆணையம் கேட்டிருக்கும் ஆவணங்கள் எதுவுமே கையில் இருக்க வாய்ப்பு இல்லை.

ஒவ்வொரு வாக்காளரும் 2002-2004 சிறப்பு வாக்காளர் பட்டியலில் இருந்த தன்னுடைய பதிவை அடையாளம் கண்டு இப்போதைய விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இதற்கு ஒவ்வொருவருக்கும் நீண்ட நேரம் தேவைப்படும்.

இந்த சட்ட விரோத நடவடிக்கையை எதிர்த்துத்தான் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடுத்து உள்ளோம். அந்த வழக்கு விசாரணை நடந்து கொண்டிருக்கும் நிலையில் தமிழ்நாட்டில் சிறப்பு தீவிர திருத்தத்துக்கு நடவடிக்கையை அறிவித்து இருப்பது நீதியை மறுப்பதாகும்.

தற்போதுள்ள வாக்காளர் பட்டியலை 2002-2004-ம் ஆண்டில் எடுக்கப்பட்ட வாக்காளர் பட்டியலோடு உத்தேசமாக பொருத்திப் பார்த்ததில் சுமார் 40 விழுக்காடு வாக்காளர்களின் பெயர்களே முழுமையாகப் பொருந்துகின்றன எனக் கூறப்படுகிறது. எவ்வளவுதான் முயற்சித்தாலும் 10 முதல் 20 விழுக்காடு வாக்காளர்களின் பெயர்கள் இதில் விடுபட்டுப் போகும்.

அதாவது தமிழ்நாட்டில் சுமார் ஒரு கோடி வாக்காளர்களின் பெயர்கள் விடுபடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இது தமிழ்நாடு சட்டசபை தேர்தலை சீர்குலைப்பதற்கான திட்டமிட்ட சதி என்று கருத வேண்டி உள்ளது.

மேற்சொன்னகாரணங்களின் அடிப்படையில் விடுதலை சிறுத்தைகள் கட்சி இந்த சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த நடவடிக்கையை எதிர்க்கிறது. எனவே சுப்ரீம் கோர்ட்டில் நிலுவையில் இருக்கும் வழக்கின் தீர்ப்பு வரும் வரை இந்த எஸ்.ஐ.ஆர். நடவடிக்கைகளை நிறுத்திவைக்க வேண்டும் என வலியுறுத்துகிறது. இந்தக் கூட்டத்தில் அதை வலியுறுத்தித் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

இதற்கிடையில் எஸ்.ஐ.ஆர். குறித்து இங்கே பங்கேற்றிருக்கும் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு பயிற்சி வழங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# அனைத்துக் கட்சி கூட்டத்தில் பங்கேற்ற 49 கட்சி தலைவர்களுக்கும் நன்றி



## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

**சென்னை, நவ.3:**

SIR நடவடிக்கைக்கு எதிராக இன்று நடைபெற்ற அனைத்துக் கட்சி கூட்டத்தில் பங்கேற்று தங்கள் உணர்வை பதிவு செய்த 49 கட்சி தலைவர்களுக்கும் நன்றி என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தள பக்கத்தில் பதிவு வெளியிட்டுள்ளார்.

அந்த பதிவில் அவர் கூறியிருப்பதாவது:-

தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைப்பறித்து, ஜனநாயகத்தைப் படுகொலை செய்யும் நோக்கோடு அவசரகதியில் மேற்கொள்ளப்படும் #SIR-க்கு எதிராக ஒன்றிணைந்து குரல் கொடுப்பது அனைத்துக் கட்சிகளின் கடமை!

வாக்காளர் பட்டியல் திருத்தத்தைக் குழப்பங்கள் - ஐயங்கள் இல்லாமல் போதிய கால அவகாசத்துடன், 2026 பொதுத் தேர்தலுக்குப் பின்பு நடத்த வேண்டும் என்ற நமது கோரிக்கையை #ECI ஏற்காததால், உச்சநீதிமன்றத்தை நாட இன்றைய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளோம்

அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் பங்கேற்றுத் தங்களுடைய உணர்வைப் பதிவு செய்த 49 கட்சிகளின் தலைவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இக்கூட்டத்தில் பங்கேற்காதவர்களும் தங்களுடைய கட்சிகளில் SIR குறித்து விவாதித்து, ஜனநாயகத்தைக் காத்திடும் முன்னெடுப்பை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஜனநாயகத்தின் ஆணி வேரையே அறுக்கும் செயலில் இந்திய தேர்தல் ஆணையம்- வைகோ



**சென்னை, நவ.3:**

சென்னை தி.நகரில் உள்ள நட்சத்திர ஓட்டலில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அனைத்து கட்சிக் கூட்டம் நடைபெற்று வருகிறது.

64 கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் 21 கட்சிகள் பங்கேற்கவில்லை என தகவல் வெளியாகியுள்ளது.

தவெக., அன்புமணி தரப்பு பாமக, நாம் தமிழர் உள்ளிட்ட கட்சிகள் கூட்டத்தை புறக்கணித்தன. இந்நிலையில், அனைத்துக் கட்சி கூட்டத்தில் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ உரையாற்றினார்.

அப்போது அவர் கூறியதாவது:-

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தமிழகத்தின் உரிமைக்கு பேராபத்து விளைவிக்கும். தமிழ்நாட்டின் நலன், உரிமைகளை பாதுகாப்பதற்காக S.I.R.-க்கு எதிராக ஒன்றிணைந்துள்ளோம்.

ஜனநாயகத்தின் ஆணி வேரையே அறுக்கும் செயலில் இந்திய தேர்தல் ஆணையம் ஈடுபட்டுள்ளது. பீகார் மாநிலத்தைச் சேர்ந்த 6.50 லட்சம் தொழிலாளர்கள் வேலைவாய்ப்புக்காக தமிழகத்தில் வந்து தங்கியுள்ளனர்.

S.I.R. காரணமாக வடமாநிலத்தைச் சேர்ந்த 75 லட்சம் பேர் தமிழகத்தில் வாக்களிக்கும் அபாயகரமான நிலை ஏற்படலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# அ.தி.மு.க.வில் இருந்து நீக்கம் சட்ட வல்லுநர்களுடன் செங்கோட்டையன் ஆலோசனை



**கோபி, நவ.3:**

ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன்னில் நடந்த தேவர் ஜெயந்தி விழாவில் சசிகலா, ஓ.பன்னீர்செல்வம், டி.டி.வி.தினகரனை அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் சந்தித்து பேசினார். இது தமிழக அரசியல் களத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதைத்தொடர்ந்து அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, செங்கோட்டையனை கட்சியில் இருந்து நீக்கினார்.

அ.தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் நேற்று செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தபோது,

தொடர்ந்து 53 ஆண்டுகளாக கட்சிக்காக பணியாற்றிய என்னிடம் விளக்கம் கேட்காமலே திடீரென நீக்கம் செய்தது வேதனையாக உள்ளது. எடப்பாடி பழனிசாமி 1989-ம் ஆண்டு தான் அ.தி.மு.க.வுக்கே வந்தார் என்பதை நினைவுப்படுத்துகிறேன்.

துரோகம் செய்வதில் நோபல் பரிசு கொடுக்க வேண்டுமானால், அது எடப்பாடி பழனிசாமிக்கே அளிக்க வேண்டும். நான் இன்னும் அ.தி.மு.க. தொண்டனாகவே உள்ளேன். எனக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் எதுவும் அனுப்பாமல் கட்சியில் இருந்து நீக்கியது தவறு. இது தொடர்பாக கோர்ட்டில் வழக்கு தொடருவேன் என்று கூறி இருந்தார்.


இந்நிலையில் அ.தி.மு.க.வில் இருந்து நீக்கப்பட்டது தொடர்பாக நீதிமன்றத்தை நாடுவது குறித்து கோபிசெட்டிபாளையத்தில் தனது இல்லத்தில் சட்ட வல்லுநர்களுடன் செங்கோட்டையன் ஆலோசனையில் ஈடுபட்டுள்ளார்.

ஓ.பன்னீர்செல்வம், டி.டி.வி.தினகரன், சசிகலா மற்றும் ஆதரவு மாவட்ட செயலாளர்களுடன் நவம்பர் 5-ந்தேதிக்கு பிறகு ஆலோசனை நடத்த உள்ளார்.

கொடநாடு வழக்கை 3 நாட்களுக்கு ஒரு முறை விசாரிக்க வேண்டுமென நீதிமன்றத்தில் கோரிக்கை வைக்கவும் அவர் திட்டமிட்டுள்ளார்.

# மக்களாட்சியின் தலைமையே வாக்குரிமைதான்

## கமல்ஹாசன்



**சென்னை, நவ.3:**

தமிழகம், கேரளா, புதுச்சேரி உள்ளிட்ட 12 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் சிறப்பு தீவிர வாக்காளர் திருத்தப்பணிக்கான அட்டவணையை தேர்தல் கமிஷன் வெளியிட்டுள்ளது. அதன்படி தமிழ்நாட்டில் வீடு, வீடாக வாக்காளர் கணக்கெடுப்பு படிவம் கொடுக்கும் பணி 4-ந் தேதி தொடங்கி டிசம்பர் 4-ந் தேதி வரை நடக்கிறது.

தமிழ்நாட்டில் நவம்பர் 4-ந் தேதி முதல் தீவிர வாக்காளர் பட்டியல் சீர்திருத்தம் பணிகள் தொடங்க உள்ளன. இதற்கு தி.மு.க., காங்கிரஸ் மற்றும் கூட்டணி கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. ஆனால், அ.தி.மு.க., பா.ஜ.க. உள்பட தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகள் வரவேற்பு தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில் சென்னை தி.நகரில் உள்ள நட்சத்திர ஓட்டலில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அனைத்து கட்சிக் கூட்டம் நடைபெற்றது.

அனைத்து கட்சிக் கூட்டத்தில் மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவர் கமல்ஹாசன் கூறியதாவது:

* மக்களாட்சியின் தலைமையே வாக்குரிமைதான்.

* வாக்காளர் பட்டியலில் திருத்தம் செய்ய வேண்டியது அவசியம் தான், அதில் அவசரம் ஏன்?

* தமிழகம், கேரளா, புதுச்சேரி உள்ளிட்ட 12 மாநிலங்களில் மட்டுமே சிறப்பு தீவிர வாக்காளர் திருத்த பணிகளை மேற்கொள்வதின் உள்நோக்கம் உண்மையில் வாக்காளர் பட்டியலை சரி செய்வதா? அல்லது வேறு ஏதேனும் உள்ளதா?

* இந்திய தேர்தல் ஆணையத்தின் மீதான நம்பிக்கை வரலாற்றில் இல்லாத அளவுக்கு குறைந்து விட்டது.

* கர்நாடகா, மகாராஷ்டிராவில் வாக்கு திருட்டு சம்பவங்கள் தொடர்பாக எழுந்த நியாயமான சந்தேகங்கள் இதுவரை தீர்க்கப்படவில்லை.

* தகுதி உள்ள ஒருவரின் பெயரைக்கூட பட்டியலில் இருந்து நீக்கி விடக்கூடாது.

*சிறப்பு தீவிர திருத்தப்பணி வாக்காளர் பட்டியலில் உள்ள குறைகளை தீர்க்க வேண்டும். மேலும் புதிய பிரச்சனைகளை கொண்டுவந்து விடக்கூடாது.

*தேர்தல் ஆணையம் மீதான அவநம்பிக்கை ஜனநாயகத்திற்கு ஆபத்தானது.

* நடுநிலைமையுடன் செயல்படுகிறோம் என்பதை நிரூபிக்கும் பொறுப்பு தேர்தர் ஆணையத்திற்கு உள்ளது.

* வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை 2026 சட்டசபை தேர்தலுக்கு பின் நடத்த வேண்டும் என்பதே மக்கள் நீதி மய்யத்தின் நிலைப்பாடு

இவ்வாறு அவர் கூறினார்.

# பாஜக- தேர்தல் ஆணையம் இணைந்து நவீன முறையில் வாக்குத்திருட்டை செயல்படுத்துகிறது

## செல்வப்பெருந்தகை



**சென்னை, நவ.3:**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அனைத்து கட்சிக் கூட்டம் நடைபெற்று வருகிறது.

தவெக., அன்புமணி தரப்பு பாமக, நாம் தமிழர் உள்ளிட்ட கட்சிகள் கூட்டத்தை புறக்கணித்தன.

சென்னை தி.நகரில் உள்ள நட்சத்திர ஓட்டலில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அனைத்து கட்சிக் கூட்டம் நடைபெற்று வருகிறது.

64 கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் 21 கட்சிகள் பங்கேற்கவில்லை என தகவல் வெளியாகியுள்ளது.

தவெக., அன்புமணி தரப்பு பாமக, நாம் தமிழர் உள்ளிட்ட கட்சிகள் கூட்டத்தை புறக்கணித்தன.

இந்நிலையில், அனைத்துக் கட்சி கூட்டத்தில் தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை உரையாற்றினார்.

அப்போது அவர் கூறியதாவது:-

குறைந்தபட்ச நியாயம் கூட இல்லாமல் தேர்தல் ஆணையம் மோசடியாக செயல்படுகிறது.

பாஜகவும் தேர்தல் ஆணையமும் இணைந்து நவீன முறையில் வாக்குத் திருட்டை செயல்படுத்துகிறது.

நியாயமான முறையில் வெற்றி பெற முடியாது என்பதால் தேர்தல் ஆணையத்தை பயன்படுத்தி குறுக்கு வழியில் வெற்றி பெற பாஜக முயற்சிக்கிறது.

குடியுரிமை சான்றிதழை கொடு என்றால் என்னால் கூட தற்போது கொடுக்க முடியாது.

இவ்வாறு அவர் கூறினார்.

# சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. படுதோல்வி அடையும்- அன்புமணி

**அரியலூர், நவ.3:**

'உரிமை மீட்க தலைமுறை காக்க' எனும் நடைபயணத்தை பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் மேற்கொண்டுள்ளார். அரியலூர் மாவட்டம் பெரியநாகலூர் சுண்ணாம்புக் கல் சுரங்கத்தை பார்வையிட்ட அவர் நிருபர்களிடம் கூறியதாவது:-

கர்நாடகாவில், கடந்த மாதம் கிருஷ்ணா நீர்பாசனம் ஒரே திட்டத்துக்கு ரூ.70 ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அங்கு 2 முறை சாதிவாரிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு உள்ளது. இதையெல்லாம் கர்நாடக அரசிடம் இருந்து தமிழக அரசு கற்றுக்கொள்ள வேண்டும். கடந்த 2023-ம் ஆண்டில், 23 குவாரிகளில் ரூ.27 கோடி வருவாய் கிடைத்துள்ளதாக கணக்கு காட்டியுள்ளது இந்த அரசு.

இதில் ஒரு குவாரியில் 8 லாரிகள் மட்டுமே செல்கிறது என்று தமிழக அரசு கூறுகிறது.

இதனை அமலாக்கத்துறை கண்டுப்பிடித்து, விசாரணை நடத்துமாறு காவல்துறைக்கு பரிந்துரைத்துள்ளது. இன்னும் 4 மாதங்களில் இந்த ஆட்சியை மக்கள் அகற்றுவர்கள். வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் தி.மு.க. படுத்தோல்வி அடையும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# "விஜய்க்கு மக்கள் மீது அக்கறை இல்லை"

## கருணாஸ் விமர்சனம்



**சென்னை, நவ.3:**

சென்னை சென்னை தி.நகரில் உள்ள நட்சத்திர ஓட்டலில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அனைத்து கட்சிக் கூட்டம் நடைபெற்றது.

64 கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் 21 கட்சிகள் பங்கேற்கவில்லை என தகவல் வெளியாகியுள்ளது. தவெக., அன்புமணி தரப்பு பாமக, நாம் தமிழர் உள்ளிட்ட கட்சிகள் கூட்டத்தை புறக்கணித்தன.

இந்நிலையில், SIR-க்கு எதிரான அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் விஜய் பங்கேற்காதது குறித்து முக்குலத்தோர் புலிப்படைத் தலைவர் கருணாஸ் விமர்சித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று நடைபெற்ற அனைத்துக் கட்சி கூட்டத்தில் SIR பற்றியும், அதன் விபரீதத்தை பற்றியும் அனைத்துக் கட்சி தலைவர்களும் தங்களது கருத்துகளை எடுத்துரைத்தார்கள்.

தேர்தல் வரும் நிலையில், தேர்தல் ஆணையம் செய்யக்கூடிய SIR நடவடிக்கை முழுக்க முழுக்க தமிழகத்திற்கும், தமிழக மக்களுக்கும் விரோதமானது.

குறுக்கு வழியில் வாக்குரிமைகளை பறிப்பதன் மூலம் குடியுரிமையற்றவர்களாக சிறுபான்மையினர்களையும் மற்றவர்களையும் உருவாக்கனும் என்பதுதான் அவர்களுடைய தொலைநோக்கு திட்டம்.

அதற்கு நாம் எந்த விதத்திலும் இடம் கொடுத்துவிடக்கூடாது. சட்டரீதியாக அனைவரும் உச்சநீதிமன்றம் சென்று அவரவர்கள் தனிதனியாக வழக்கு போட வேண்டும்.

அந்தமாதிரி நேரங்களில் திமுக சார்பிலான வழக்கறிஞர்கள் உதவி செய்வார்கள் என்கிற உத்தரவாதத்தை கொடுத்திருக்கிறார்கள். SIR நடவடிக்கையால் ஏற்படும் விபரீதம் தொடர்பாக மக்களிடம் எடுத்து சொல்ல வேண்டும் என்றும் கூறியிருக்கிறார்கள்.

இதுபோன்ற மக்களின் முக்கியமான பிரச்சனைகள், மாநிலத்தில் மக்களுடைய வாக்குகள் பறிப்போகும் நிலை நம் கண் எதிரே தெரிகிறது.

இதுபோன்ற கூட்டத்தில் விஜய் கலந்துக்காமல், பிரதிநிதிகளை அனுப்பாமல் இருப்பது அவருக்கு மக்கள் மீது அக்கறை இல்லாததை காட்டுகிறது.

பாஜக எந்தவிதமான திட்டத்தை கொண்டு வந்தாலும் எடப்பாடி பழனிசாமி ஏற்றுக் கொள்வார்.

இவ்வாறு அவர் கூறினார்.

# காவல் நிலையத்தில் அதிகாரி முன்னிலையில் பா.ம.க. நிர்வாகியின் கழுத்தை அறுத்த ரவுடிகள்- அன்புமணி கண்டனம்



**சென்னை, நவ.3:**

பா.ம.க. தலைவர் டாக்டர் அன்புமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறிஇருப்பதாவது:-

அச்சிறுப்பாக்கம் வட்டம் மதூர் கிராமத்தைச் சேர்ந்த பாட்டாளி மக்கள் கட்சியின் நிர்வாகிகள் செல்வராஜ், வினோத், விக்னேஷ், சந்தோஷ்குமார், சேகர் ஆகியோர் கடந்த சில வாரங்களுக்கு முன் விளையாடிக் கொண்டிருந்தபோது, அங்கு கஞ்சா போதையில் வந்த பாதிரி காலனியைச் சேர்ந்த விஜயகுமார் உள்ளிட்ட 5 பேர் பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்தவர்களிடம் தகராறு செய்தனர்.

இது தொடர்பாக பா.ம.க.வினர் அளித்த புகாரின் அடிப்படையில் விஜயகுமார் உள்ளிட்ட ஐவரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். அதே நேரத்தில் எந்தத் தவறும் செய்யாத பா.ம.க.வினர் மீதும் காவல்துறையினர் பொய்வழக்குப் பதிவு செய்து கைது செய்தனர். இரு தரப்பினரும் அண்மையில் நிபந்தனைப் பிணையில் விடுதலை செய்யப்பட்டு கடந்த சில நாள்களாக அச்சிறுப்பாக்கம் காவல் நிலையத்தில் கையெழுத்திட்டு வந்துள்ளனர்.

பா.ம.க. நிர்வாகிகள் 5 பேரும் நேற்று காலை அச்சிறுப்பாக்கம் காவல் நிலையத்தில் கையெழுத்திட்டுக் கொண்டு இருந்தபோது, அங்கு கஞ்சா போதையில் வந்த விஜயகுமாரும் மற்றவர்களும் பா.ம.க.வினருடன் மோதலில் ஈடுபட்டுள்ளனர். அதன் தொடர்ச்சியாக காவல் நிலைய உதவி ஆய்வாளர் தியாகராஜன் உள்ளிட்ட காவலர்கள் கண் எதிரிலேயே பா.ம.க. நிர்வாகி வினோத் என்பவரை விஜயகுமாரும் மற்றவர்களும் கழுத்தை அறுத்து படுகொலை செய்ய முயன்றனர். இதில் கழுத்தறுபட்ட வினோத் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் மருத்துவம் பெற்று வருகிறார்.

வினோத்துக்கு தரமான மருத்துவம் அளிப்பதுடன், அவருக்கு ரூ.10 லட்சம் நிதி உதவி அளிக்கவும் தமிழ்நாடு அரசு முன்வர வேண்டும் என்றும் வலியுறுத்துகிறேன்.

# மழை ஓய்ந்ததால் முல்லை பெரியாறு அணைக்கு நீர்வரத்து சரிவு



**கூடலூர், நவ.03:** வடகிழக்கு பருவமழை கடந்த மாதம் மத்தியில் தொடங்கியபோது கேரளா மற்றும் தேனி மாவட்டத்தில் உள்ள மேற்கு தொடர்ச்சி மலை உள்ளிட்ட பகுதிகளில் பரவலாக கனமழை பெய்தது. இதனால் அணைகள், ஆறு, குளம், கண்மாய் உள்ளிட்ட நீர்நிலைகளுக்கு நீர்வரத்து அதிகரித்தது.

முல்லை பெரியாறு அணைக்கு நீர்வரத்து 10 ஆயிரம் கனஅடிக்கு மேல் அதிகரித்தது. மேலும் ரூல்கர்வ் நடைமுறையால் உபரியாக கேரளாவுக்கு தண்ணீர் வீணாக திறக்கப்பட்டது. இந்த நிலையில் தற்போது மழை முற்றிலும் ஓய்ந்த நிலையில் அணைக்கு நீர்வரத்து 333 கனஅடியாக குறைந்துள்ளது.

இதனால் தமிழகத்திற்கு திறக்கப்படும் தண்ணீரின் அளவும் 400 கனஅடியாக குறைக்கப்பட்டது. அணையின் நீர்மட்டம் 137.65 அடியாக உள்ளது. 6533 மி.கனஅடி நீர் இருப்பு உள்ளது.

ஆண்டிபட்டி அருகே உள்ள 71 அடி உயரம் கொண்ட வைகை அணையின் நீர்மட்டம் 69.11 அடியாக உள்ளது. 1823 கனஅடி நீர் வருகிற நிலையில் 1499 கனஅடி நீர் குடிநீர் மற்றும் பாசனத்திற்காக திறக்கப்படுகிறது. அணையில் 5601 மி.கனஅடி நீர் இருப்பு உள்ளது.

மஞ்சளாறு அணையின் நீர்மட்டம் 44.80 அடியாக உள்ளது. வரத்தும், திறப்பும் இல்லை. சோத்துப்பாறை அணையின் நீர்மட்டம் முழு கொள்ளளவான 126.28 அடியாக உள்ளது. அணைக்கு வரும் 139 கனஅடி நீர் அப்படியே திறக்கப்படுகிறது.

சண்முகாநதி அணையின் நீர்மட்டம் 51.80 அடியாக உள்ளது. 4 கனஅடி நீர் வருகிறது. 14.47 கனஅடி நீர் திறக்கப்படுகிறது. மழை எங்கும் இல்லை.

# சேந்தமங்கலம் அரசு மருத்துவமனையில் அமைச்சர் மா.சுப்பிரமணியம் திடீர் ஆய்வு

**நாமக்கல், நவ.03:** நாமக்கல் மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியம் வருகை தந்தார்.



அமைச்சர் மா.சுப்பிரமணியம் இன்று கொல்லிமலையில் இருந்து காரவள்ளி வரை சுமார் 25 கிலோ மீட்டர் நடப்போம் நலம் பெறுவோம் திட்டத்தின் கீழ் நடைபயணம் மேற்கொண்டார். இதையடுத்து அவர் சேர்ந்தமங்கலம் அரசு மருத்துவமனையில் திடீர் ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின்போது சிகிச்சை பெற்று வரும் பயனாளிகளிடம் மருத்துவமனையின் சிகிச்சை முறைகள் டாக்டர்கள் மற்றும் செவிலியர்கள் பணியாளர்கள் ஆகியோர் மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து கேட்டறிந்தார்.

மேலும் கழிவறை, சமையல் கூடம், ஆய்வுக்கூடம் டாக்டர்கள் அறை, செவிலியர்கள் அறை மற்றும் பிற பகுதிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேலும் தங்குதடையின்றி பாதுகாப்பான சுகாதாரமான சேவைகளை பொது மக்களுக்கு வழங்க டாக்டர்களுக்கு அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது மருத்துவ பணிகள் இணை இயக்குனர் டாக்டர் ராஜ்மோகன் உட்பட பலர் உடன் இருந்தனர்.

இதை தொடர்ந்து நாமக்கல் மாநகராட்சியில் உள்ள பழைய அரசு மருத்துவமனை வளாகத்தில் ரூ. 1 கோடி மதிப்பீட்டில் புதிய சித்த மருத்துவமனையை திறந்து வைத்தார். ரூ.2.28 கோடி மதிப்பில் புதுச்சத்திரம், பரமத்தி வேலூர், திருச்செங்கோடு வட்டாரங்களில் 3 புதிய பொது சுகாதார வளாகம், 2 துணை சுகாதார நிலையங்கள் மற்றும் ரூ.6 லட்சம் மதிப்பில் ஆதரவற்ற மனநலம் பாதிக்கப்பட்ட நபர்களுக்கான அவசர சிகிச்சை மற்றும் மீட்பு மையத்தையும் திறந்து வைத்து பேசினார்.




செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து
ஆற்றின் அடங்கப் பெறின். - குறள் 123

విద్య వినయమంచు విభుదుండు భావించి
మెలఁగుచుండు బ్రతుకు మెరుగు పడఁగ - కురళ్ 123

कोई संयमशील हो, अगर जानकर तत्व ।
संयम पा कर मान्यता, देगा उसे महत्व ॥ - कुराल 123

Serivarindhu Seermai Payakkum Arivarindhu
Aatrin Atangap Perin - Kural 123

# இ.பி.எஸ். தலைமையில் நவம்பர் 5ம் தேதி மாவட்ட செயலாளர்கள் கூட்டம்

**சென்னை, நவ.03:** நவம்பர் 5ம் தேதி அதிமுக மாவட்ட செயலாளர்கள் கூட்டம் நடைபெறும் என கட்சி தலைமை அறிவித்துள்ளது.



அதன்படி, அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் நவம்பர் 5ம் தேதி காலை 10.30 மணிக்கு அதிமுக தலைமை அலுவலகத்தில் கூட்டம் நடைபெறும் என அறிவித்துள்ளது.

மாவட்ட செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# எர்ணாகுளம்-பெங்களூரு இடையே புதிய வந்தே பாரத் ரெயில் சேவை

**கோவை, நவ.03:** தெற்கு ரெயில்வேயில் தற்போது 11 வந்தே பாரத் ரெயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன. மற்ற விரைவு ரெயில்களை காட்டிலும் வேகமாகவும், சொகுசாகவும் இருப்பதால் வந்தே பாரத் ரெயிலுக்கு பயணிகளிடம் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.



இந்தநிலையில் தென்மேற்கு ரெயில்வே சார்பில் கர்நாடக மாநிலம் பெங்களூரில் இருந்து தமிழகம் வழியாக கேரள மாநிலம் எர்ணாகுளத்துக்கு புதிய வந்தே பாரத் ரெயில் சேவை தொடங்கப்பட உள்ளது. வருகிற 7-ந் தேதி முதல் இதன் சேவை தொடங்குகிறது.

இந்த ரெயிலை சேலம், ஈரோடு, கோவை, திருப்பூரில் நின்று செல்லுமாறு இயக்க வேண்டும் என மத்திய ரெயில்வே மந்திரியிடம் துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் வலியுறுத்தி இருந்தார். அவரது வேண்டுகோள்படி இந்த 4 ரெயில்களிலும் புதிய வந்தே பாரத் ரெயில் நின்று செல்லும் என ரெயில்வே நிர்வாகம் அறிவித்துள்ளது.

மேலும் ரெயில்வே நிர்வாகம் சார்பில் பெங்களூரு-எர்ணாகுளம் இடையே வந்தே பாரத் ரெயில் இயக்க நேரம் குறித்த அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி புதன்கிழமை தவிர தினந்தோறும் காலை 5.10 மணிக்கு பெங்களூரு ரெயில் நிலையத்தில் இருந்து புறப்படும் பெங்களூரு-எர்ணாகுளம் வந்தே பாரத் ரெயில் (எண் 26651) 5.20 மணிக்கு கிருஷ்ணராஜபுரம், 8.15 மணிக்கு சேலம், 9 மணிக்கு ஈரோடு, 9.47 மணிக்கு திருப்பூர், 10.35 மணிக்கு கோவை, 11.30 மணிக்கு பாலக்காடு, 12.30 மணிக்கு திருச்சூர், 1.50 மணிக்கு எர்ணாகுளம் சென்றடையும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

மறுமார்க்கமாக புதன்கிழமை தவிர மற்ற நாட்களில் தினமும் பிற்பகல் 2.20 மணிக்கு எர்ணாகுளத்தில் இருந்து புறப்படும் எர்ணாகுளம்-பெங்களூரு வந்தே பாரத் ரெயில் (எண் 26652) 3.20 மணிக்கு திருச்சூர், 4.35 மணிக்கு பாலக்காடு, 5.23 மணிக்கு கோவை, 6.05 மணிக்கு திருப்பூர், 6.50 மணிக்கு ஈரோடு, 7.20 மணிக்கு சேலம், 10.25 மணிக்கு கிருஷ்ணராஜபுரம், 11 மணிக்கு பெங்களூரு நிலையம் சென்றடையும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

மூன்று மாநிலங்களை இணைக்கும் வகையில் இந்த வந்தே பாரத் ரெயில் இயக்கப்பட உள்ளதால் பயணிகளிடம் நல்ல வரவேற்பு இருக்கும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# கரூர் கூட்ட நெரிசல் - வேலுச்சாமிபுரத்தில் உள்ள வணிகர்களிடம் சி.பி.ஐ. விசாரணை

**சென்னை, நவ.03:** கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக ஐ.பி.எஸ். அதிகாரி பிரவீன்குமார் தலைமையிலான சி.பி.ஐ. அதிகாரிகள் கரூர் தாந்தோணிமலையில் உள்ள அரசு சுற்றுலா மாளிகையில் தங்கி விசாரணை நடத்தி வருகின்றனர். அவர்கள் நேற்று முன்தினம் இந்த வழக்கு தொடர்பாக வீடியோகிராபர் ராஜசேகரன் உள்பட 4 பேரிடம் விசாரணை நடத்தினர். மேலும் கூட்ட நெரிசல் சம்பவம் நடைபெற்ற கரூர் வேலுச்சாமிபுரத்திற்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டனர்.



அப்போது அப்பகுதியில் உள்ள கடைகள், நிறுவனங்களின் உரிமையாளர்கள், பணியாளர்கள் ஆகியோரிடம் விசாரணை மேற்கொண்டனர். மேலும் அங்குள்ள கண்காணிப்பு கேமராக்கள் குறித்தும் கேட்டறிந்தனர். பின்னர் 3டி லேசர் ஸ்கேனர் கருவி உதவியுடன் சாலையின் பல்வேறு இடங்களில் அளவீடு செய்தனர். அப்போது சம்பவ இடத்தில் இருந்து 100 அடி வரை அளவீடு செய்யப்பட்டது. இந்த சோதனை சுமார் 6½ மணி நேரம் நடந்தது.

நேற்று 2-வது நாளாக சி.பி.ஐ. அதிகாரிகள் சம்பவ இடத்தில் ஆய்வு செய்தனர். காலை 7 மணிக்கு அங்கு வந்த அவர்கள் 3டி லேசர் ஸ்கேனர் கருவியை கொண்டு சாலையை அளவீடு செய்யும் பணியில் ஈடுபட்டனர். அப்போது சாலையின் வெவ்வேறு பகுதிகளில் வைத்து அளவீடு செய்யும் பணிகள் நடைபெற்றன. இந்த அளவீடு செய்யும் பணியானது மாலை 4.30 மணி வரை நடைபெற்றது. சம்பவம் நடந்த இடத்தின் 2 பக்கங்களிலும் அளவீடு செய்யும் பணிகள் நடைபெற்றன. நேற்று காலை 7 மணி முதல் மாலை 4.30 மணி வரை 9½ மணி நேரம் இந்த ஆய்வு பணி நடந்தது.

இன்று 3-வது நாளாக சி.பி.ஐ. விசாரணை நடைபெற்று வருகிறது. வேலுச்சாமிபுரத்தில் உள்ள கடைகள், வர்த்தக நிறுவனத்தினர் உள்ளிட்ட 306 பேருக்கு ஏற்கனவே சி.பி.ஐ. சம்மன் அனுப்பி இருந்த நிலையில் கரூர் சுற்றுலா மாளிகையில் தற்போது 10 வணிகர்கள் விசாரணைக்கு ஆஜராகி உள்ளனர்.

# திருநெல்வேலி: 4 ஆண்டுகள் தலைமறைவாக இருந்த கொலை வழக்கு குற்றவாளி கைது

திருநெல்வேலி மாவட்ட காவல்துறை வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

திருநெல்வேலி மாவட்டம், தாழையூத்து காவல் நிலைய சரகத்தில் கடந்த 2021-ம் ஆண்டு முன் விரோதத்தில், அப்பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் கொலை செய்யப்பட்டார். இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளில் ஒருவரான தென்காசி மாவட்டத்தைச் சேர்ந்த காளிமுத்து மகன் கணேசமூர்த்தி (வயது 32) என்பவர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை செய்யப்பட்ட காலகட்டத்தில் இருந்து, அவர் தலைமறைவாக இருந்து வந்தார்.

இந்த நிலையில் வழக்கின் புலன் விசாரணை முடிக்கப்பட்டு, கணேசமூர்த்தி தலைமறைவாக இருந்த நிலையில் இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. நீதிமன்ற விசாரணையின் போது கணேசமூர்த்திக்கு நீதிமன்றத்தால் 10.12.2021 அன்று பிடிவாரண்டு பிறப்பிக்கப்பட்ட நிலையில், அவர் தொடர்ந்து 4 ஆண்டுகளாக தலைமறைவாக இருந்து வந்தார்.

திருநெல்வேலி மாவட்டத்தில் நிலுவையில் இருந்து வரும் பிடிவாரண்டுகளின் மீது உரிய நடவடிக்கை எடுக்க மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் உத்தரவிட்டு, மாவட்டம் முழுவதும் நீதிமன்றத்தால் பிடிவாரண்டு பிறப்பிக்கப்பட்ட நபர்களின் மீது தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த நிலையில் கணேசமூர்த்தியை கைது செய்வதற்கு பல்வேறு கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் நேற்று, தலைமறைவு குற்றவாளியான கணேசமூர்த்தியை மதுரையில் வைத்து திருநெல்வேலி மாவட்ட காவல்துறையினர் கைது செய்தனர். பின்னர் கைது செய்யப்பட்ட கணேசமூர்த்தி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு உத்தரவுபடி பாளை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

# 'முதலமைச்சரின் தாயுமானவர்' திட்டத்தின் வயது வரம்பை தளர்த்தியது தமிழ்நாடு அரசு

**சென்னை, நவ.03:** முதியோர்-மாற்றுத்திறனாளிகளின் வீடுகளுக்கு சென்று ரேஷன் பொருட்களை வழங்கும் தாயுமானவர் திட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தண்டையார்பேட்டையில் கடந்த ஆகஸ்டு 12ம் தேதி அன்று தொடங்கி வைத்தார்.




இத்திட்டத்தின் மூலம், தமிழக அரசு வழங்கும் பல்வேறு சேவைகளை பொது மக்களின் வீடு தேடிச் சென்றடைய செய்யும் வகையில் மாநிலத்தில் உள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு ரேஷன் பொருட்களான அரிசி, சர்க்கரை உள்ளிட்ட பொருட்கள் அவர்களின் வீடுகளுக்கே சென்று வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இந்த திட்டத்தின் வாயிலாக தமிழ்நாடு முழுவதும் உள்ள 34,809 நியாயவிலைக் கடைகளை சேர்ந்த 70 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களை கொண்ட 15 லட்சத்து 81 ஆயிரத்து 364 ரேசன் கார்ட்டில் உள்ள 20 லட்சத்து 42 ஆயிரத்து 657 பயனாளிகளும், 91 ஆயிரத்து 969 ரேசன் அட்டைகளில் உள்ள ஒரு லட்சத்து 27 ஆயிரத்து 797 மாற்றுத்திறனாளிகளும் பயன் அடைகின்றனர்.

ஒவ்வொரு மாதமும் 2-வது சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இந்நிலையில், வீட்டிற்கே சென்று ரேஷன் பொருட்கள் விநியோகிக்கும் 'முதலமைச்சரின் தாயுமானவர்' திட்டத்திற்கான வயது வரம்பை 70 வயதில் இருந்து 65 வயதாக தமிழக அரசு தளர்த்தியுள்ளது.

# காந்திக்கு பின் இந்த நாட்டை புரிந்துகொண்ட ஒரே நபர் பிரதமர் மோடி தான்!

## ஆளுநர் ரவி பேச்சு

**சென்னை, நவ.03:** சென்னை ராஜ்பவனில் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் நிறுவன தினக் கொண்டாட்டத்தில் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி நேற்று உரையாற்றினார்.



அப்போது பேசிய அவர், பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையில் கடந்த பத்து ஆண்டுகளாக இந்தியா வளர்ச்சி அடைந்து வருகிறது. மேலும் வறுமையைக் குறைப்பதில் வெற்றி கண்டுள்ளது.

பத்து ஆண்டுகளுக்கு முன்பு வறுமை 30 சதவீதத்திற்கும் அதிகமாக இருந்தது. ஆனால் இப்போது சர்வதேச அமைப்புகளின் கூற்றுப்படி, 25 கோடி மக்கள் வறுமையிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர். மேலும் தற்போதைய வறுமை நிலை 6 சதவீதத்திற்கும் கீழே குறைந்துள்ளது.

தேசத்தின் உணர்வை, பாரதத்தின் இதயத்துடிப்பை புரிந்துகொண்ட ஒரு தலைமை நமக்குக் கிடைத்துள்ளது. மகாத்மா காந்திக்குப் பிறகு, இந்த நாட்டை மிக நன்றாகப் புரிந்துகொண்டவர் பிரதமர் நரேந்திர மோடிதான் என்று நான் உறுதியுடன் சொல்கிறேன்.

அனைவரும் பாரதத்தை ஒரு குடும்பமாகக் கருத வேண்டும். சுதந்திரத்திற்குப் பிறகு, மொழி என்ற பெயரில் மக்களிடையே தடைகளை உருவாக்கியது துரதிர்ஷ்டவசமானது.

மாநில தினம் கொண்டாடுவது என்பது அந்தந்த மாநிலத்தின் கலாச்சாரத்தை கொண்டாடுவதற்கு கிடைத்த ஒரு வாய்ப்பு. இதுவே 'ஏக் பாரத் ஷ்ரேஷ்டா பாரத்' (ஒரே இந்தியா, சிறந்த இந்தியா)" என்று தெரிவித்தார்.

# கார்த்திகை தீபத் திருவிழாவுக்கு 4,764 சிறப்பு பஸ்கள் இயக்கம்- திருவண்ணாமலை கலெக்டர் தகவல்

**சென்னை, நவ.03:** திருவண்ணாமலையில் அருணாசலேஸ்வரர் கோவில் கார்த்திகை தீபத் திருவிழா அடுத்த மாதம் (டிசம்பர்) 3-ந்தேதி நடைபெற உள்ளது. இதையொட்டி பஸ்கள் இயக்கம் குறித்து அனைத்து மண்டல போக்குவரத்து கழக பொது மேலாளர்களுடன் ஆலோசனை கூட்டம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது.

கூட்டத்துக்கு மாவட்ட கலெக்டர் தர்பகராஜ் தலைமை வகித்து பேசியதாவது:-

கார்த்திகை தீபத் திருவிழா அன்று நகருக்கு வெளியில் மார்க்கெட்டிங் கமிட்டி (திண்டிவனம் சாலை), சர்வேயர் நகர் (வேட்டவலம் சாலை), நகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி எதிரில் (திருக்கோவிலூர் சாலை), மணலூர்பேட்டை சாலை, விட்டோ டிஜிட்டல் இடம், அத்தியந்தல் (செங்கம் சாலை), டான்போஸ்கோ பள்ளி (காஞ்சி சாலை), அண்ணா நுழைவு வாயில் (வேலூர் சாலை), கிளியாப்பட்டு சந்திப்பு (அவலூர் பேட்டை சாலை) ஆகிய 9 இடங்களில் தற்காலிக பஸ் நிலையங்கள் அமைய உள்ளன.

மேலும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்கள் சார்பில் 4,764 சிறப்பு பஸ்கள் இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. திருவண்ணாமலை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் சார்பில் 70 மினி பஸ்களும் இயக்கப்பட உள்ளன. இவ்வாறு அவர் பேசினார்.





# கவிதை அரங்கம்!



உண்மையான மகிழ்ச்சி
எதிர்காலத்தைப் பற்றிய
கவலையில்லாமல் நிகழ்
காலத்தை அனுபவிப்பதே

யாரும் கூட வரப்போறது
இல்ல யாரும் நமக்காக
நிற்க போறதும் இல்ல
வாழ்க்கைய தனியா
தான் நடந்து கடக்கனும்

உலகம் அதிசயமாகவே
இருந்தாலும் மனம்
விரும்பினால் தான்
ரசிக்க முடியும்

பிடிக்கும் வரை
பொக்கிஷம்
வெறுக்கப்பட்டால் வெறும்
குப்பை பொருட்கள்
மட்டுமல்ல உறவுகளும்
தான்

துரோகிகள் மீது நம்பிக்கை
வைத்ததற்காக
வருத்தப்படாதே
நீ வைத்த நம்பிக்கைதான்
துரோகிகளை உனக்கு
அடையாளம்
காட்டியிருக்கிறது

இந்த உலகில் மிகச்
சிறந்த மற்றும் அழகான
விஷயங்களைக் காணவோ
கேட்கவோ முடியாது
ஆனால்
இதயத்திலிருந்து உணர
முடியும்

# புரிந்து கொண்டால்...



உங்கள் மனம் சில நேரங்களில் அந்த பழைய நினைவுகளை மீண்டும் மீண்டும் சுற்றிக் கொண்டே இருக்கிறது...

சந்தித்த அவமானங்கள்,
எதிர்கொண்ட துரோகங்கள்,
மூழ்கடித்த வேதனைகள்...

"இதை நன்றாக புரிந்துகொண்டால் இனி காயம் வராது" என்று மனம் தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்கிறது.

ஆனால் உண்மை என்ன தெரியுமா — அந்த சுழல்தான் நம்மை அடைத்து வைக்கிறது.

அந்த நினைவை விட முடியாமல் போனதால்தான்
அமைதி நம்மைத் தேடி வர முடியாமல் போகிறது...

மீள்வது என்பது எல்லா கேள்விகளுக்கும் பதில் கண்டுபிடிப்பது அல்ல —

சில கேள்விகளை அமைதியோடு விடுவது தான்.

மனதின் ஒவ்வொரு முடிச்சையும் அவிழ்க்க முயலாதீர்கள்...

சில நேரம் விடுங்கள் —

அப்போதுதான் நீங்கள் மீண்டும் நீங்களாக மாறுவீர்கள்.

வாழ்க வளமுடன்
என்றும் அன்புடன்

நன்றி - ஆனந்தி

# டீக்கடைக்காரர்



கண்ணா: இன்னாபா, இப்டி குந்திக்கின? ரெண்டு டீ சொல்லு.

சின்னா: இன்னாது டீ சொல்னுமா? துட்டுக்கிதா?

கண்ணா: இன்னாபா? நமக்குள்ள துட்டு அது இதுன்ற?

சின்னா: கையில கால்காசு துட்டு இல்ல, ஆட்று பன்றாறு. வெறுப்பேத்தாம போயிறு.

கண்ணா: பெரிய இவ்று, ஒரு டீ சொல்ல வக்குள்ள, பேச்சப்பாரு

சின்னா: நானா டீ கேட்டேன், சவ்டால சொல்லிக்கின, பெர்சா

கண்ணா: அதான் சொல்லல இல்ல, எதுக்கு வம்பு வளத்துக்கினு?

சின்னா: இன்னாது நா வம்பு வளத்துக்கினேனா? வேணாம்னு பாக்கிறேன்

கண்ணா: என்ன அட்சிர்வியா? அட்ர்ரா பாப்போம். கைய வச்சிப்பாரு அப்பாலத் தெரியும்

டீக்கடைக்கு வந்திருந்தவர்களை விட அந்த தெருநாய்க்கு ஆர்வம் அதிகமானது. காது மடலை தூக்கி ஆர்வமாக அட்டேன்ஷனில் நின்றது.

சின்னா: என்னா? என்னியால முடியாதுங்காட்டியும்?

கண்ணா: அதேன் வச்சுப்பாருல்ல, கைய வச்சிருவியா?

சின்னா: இன்னா பூச்சிக் காட்றியா? என்னியப்பத்தித் தெரியுமில்ல?

கண்ணா: தெரியுண்டா கஸ்மாலம், வாடா வாடா கிட்ட வாடா

இப்போது நாய் இன்னும் கொஞ்சம் விரைப்பாக கண்கொட்டாமல் நின்றது.

சின்னா: அப்பாலப் போய்டு, தாங்க மாட்ட சொல்ட்டேன்

கண்ணா: என்னடா பிலிம் காட்ற, வா வந்து கைய வைன்றேன்

சின்னா: ஒனக்கு அம்புட்டுத் திமிரா? ஓடிரு சொல்லிப்புட்டேன்

கண்ணா: ஒரு டீ சொல்ல துப்பில்ல, எங்கையில சீன் காட்டுற

சின்னா: ஆமால, டீ சொல்ல மாட்டேந்தேன். நெதம் ஒனக்கு யாராச்சும் டீ சொல்லோனும். நீயும் குடிச்சிட்டு போவ

கண்ணா: ஆமாடா, நீ சொல்லல்லை, என்னாத்துக்கு மொறைப்பு காட்ற

சின்னா: சீமத்தொர கணக்கா வருவாரு, டீ சொல்லுவாக இவருக்கு

டீக்கடை உரிமையாளர்: யப்பா ரெண்டு பேரும் சமாதானமா போயிருங்க, கடை வாசல்ல பிரச்சினை வாணாம்.

வேடிக்கைப் பாத்தவங்க எல்லாம் டீ குடிச்சிட்டு வூட்டுக்கு போய்ட்டாக.

இப்போது கடைக்காரர் மீது நாய்க்கு கோபம் வந்தது. அந்தக் காட்சியின் வீரியத்தை குறைத்து விட்டாரே!

ஏம்பா சின்னா உனக்கு வேணும்னா டீ போடவா? சக்கரை தூக்கலாத்தானே?

சின்னா: இல்லண்ணே கையில துட்டுல்ல. கணக்குல வச்சுக்க

டீக்கடைக்காரர்: ஓங்கைலயும் துட்டுல்லையா, அடச்சீ எடத்த காலி பண்ணுப்பா

கண்ணா, சின்னா: தோள்மேல் கைபோட்டவாறு

ஒலகே மாயம் வாழ்வே மாயம் ஒரு சிங்கிள் டீக்கு வழியே காணும்.

பாடியபடியே நடந்து சென்ற இருவரையும் பார்த்து நாய்க்கு கடுமையான கோபம் வந்தது. மெல்ல டீக்கடைக்காரர் முன் வாலாட்டி அவர் போட்ட பொறையைக் கவ்விக்கொண்டு ஓடிவிட்டது.

**வி.பிரபாவதி**
**மடிப்பாக்கம்**

# சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*கணவன்: டார்லிங்! நான் இந்த மாச சம்பளத்துக்கு பதிலா 500 முத்தம் தரலாம்-னு நினைக்கிறேன். என்ன டிம தானே?*

*மனைவி: எனக்கொன்னும் பிரச்சினை இல்லை. நானும் அப்படியே கேபிள் காரனுக்கு 30 முத்தம், பால்காரனுக்கு 50 முத்தம், பேப்பர் காரனுக்கு 20 முத்தம், மளிகை கடைகாரனுக்கு 150 முத்தம். அவுஸ் ஓனருக்கு 250 முத்தம் கொடுத்துடுறேன் என்ன? ஓ.கே. தானே?*

*கணவன்: ???*



# தினம் ஒரு சமையல்



## இன்ஸ்டென்ஸ் கோதுமை ரவா இட்லி

தேவையான பொருட்கள்:



| | |
|---|---|
| மிதிபாகற்காய் | -6 லிருந்து 8 |
| புழுங்கலரிசி | -2 கப்வெண் |
| புளி | -எலுமிச்சை அளவு |
| ம.தூள் | -1 டீ ஸ்பூன் |
| வெல்லம் | -சிறு கட்டி |
| உப்பு | -ருசிக்கு |
| பெருங்காயத்தூள் | -2 டீ ஸ்பூன் |
| வறுக்க:- சி.மிளகாய் | -10 |
| வெந்தயம் | -1ஸ்பூன் |
| மிளகு | -1ஸ்பூன் |
| தாளிக்க:- | |
| கடுகு | -1 டீ |
| ஸ்பூன் | |
| வெந்தயம் | -1டீ ஸ்பூன் |
| சி.மிளகாய் | -2 |
| ப.மிளகாய் | -2 |
| ந.எண்ணெய் | -4 டேபிள் ஸ்பூன் |
| கறிவேப்பிலை | -2 ஆர்க்கு |
| தண்ணீர் | -தேவையான அளவு |

செய்முறை:

தேவையான பொருட்களை எடுத்து வைத்துக் கொள்ளவும். சாதத்தை உதிரியாக வடித்துக் கொள்ளவும்.ப.மிளகாயை கீறிக் கொள்ளவும்.

பாகற்காயை சுத்தம் செய்து பொடியாக நறுக்கிக் கொள்ளவும்.

புளியை ஊறவைத்து பின் நன்கு கரைத்து வடிகட்டவும்.

வடிகட்டிய புளிக்கரைசலில், ம.தூள், உப்பு சேர்த்து நன்கு கலந்து கொள்ளவும்.

சாதத்தை உதிரியாக வடித்துக் கொள்ளவும்.

அடுப்பை மிதமான தீயில் வைத்து வெறும் கடாயில் மிளகாயை போட்டு, நன்கு கருக வறுத்து தட்டில் ஆற விடவும்.

அதே கடாயில், மிளகு, வெந்தயத்தை சிவக்க வறுத்து தட்டில் ஆற விடவும்.

ஆறியதும் மிக்ஸியில் போட்டு நன்கு அரைக்கவும்.

அடுப்பை சிறு தீயில் வைத்து கடாயில் ந.எண்ணெய் விட்டு காய்ந்ததும், பாகற்காயுடன், சிறிது உப்பு சேர்த்து நன்கு வதக்கவும்.

வதக்கியதும், தட்டில் எடுக்கவும்.

அடுப்பை மிதமான தீயில் வைத்து கடாயில் ந.எண்ணெய் விட்டு காய்ந்ததும், கடுகு,வெந்தயம், ப.மிளகாய், சி.மிளகாய் தாளித்ததும், புளிக்கரைசலை ஊற்றி கொதிக்க விடவும்.

கொதித்ததும், வதக்கிய பாகற்காயை போடவும்.

பிறகு, வெல்லத்தை சேர்த்து கொதிக்க விட்டதும், வறுத்த பொடியை போடவும்.

கொதித்து கெட்டியானதும், அடுப்பை நிறுத்தி விட்டு, பெருங்காயத்தூள் சேர்த்து ஒன்று சேர கிளறி இறக்கவும்.

இறங்கியதும், பௌலுக்கு மாற்றி, மேலே 2 ஸ்பூன், ந.எண்ணெய் விடவும். இப்போது புளிக்காய்ச்சல், தயார்.

தட்டில் சாதத்தை ஆறவிட்டு, மேலே, புளிக்காய்ச்சல், சிறிது ந.எண்ணெய் விட்டு நன்கு கிளறி எடுக்கவும்.

இப்போது, வித்தியாசமான, சுவையான, சுலபமான,*மிதிபாகற்காய் புளியோதரை*தயார். இதற்கு வடகம் ஆப்ட்டாக இருக்கும். செய்து பார்த்து என்ஜாய் செய்யவும்.

இறக்கினால் சுவையான முட்டை கிரேவி தயார்

# கோரை நன்மைகள்



புத்தி கூர்மை மற்றும் தாது விருத்தி: கோரைக் கிழங்கு புத்தி கூர்மையையும் தாது விருத்தியையும் மேம்படுத்துகிறது.

சருமப் பாதுகாப்பு: இது சருமப் பாதுகாப்பிற்கும், உடல் துர்நாற்றத்தைக் குறைப்பதற்கும் சிறந்தது.

காய்ச்சல் நிவாரணம்: காய்ச்சலைக் குணப்படுத்தும் தன்மையுடையது.

மன அழுத்தத்தைக் குறைத்தல்: மன அழுத்தத்தைக் குறைக்கவும், பதட்டத்தைக் குறைக்கவும் உதவுகிறது.

இரத்த ஓட்டம்: இரத்த ஓட்டத்தை மேம்படுத்தும்.


ஆரோக்கியம்: ஆரோக்கியத்திற்கும் அழகுக்கும் கோரைக் கிழங்கு மிகவும் பயனுள்ளதாக கருதப்படுகிறது.

கோரைப் பாயில் படுப்பதன் நன்மைகள்

யோகாசனம் போன்ற நன்மைகள்: கோரைப் பாயில் படுப்பது யோகாசனம் செய்த பலனைத் தரும்.

உடல் சூட்டைக் குறைத்தல்: உடல் சூட்டைக் குறைக்கும்.

# இது மிகவும் ஆபத்தானது, இப்படியே போனால்... நடிகை நிவேதா பெத்துராஜ் ஷாக்கிங் பதிவு



சினிமா, பேட்மிண்டன் விளையாட்டு, கார் ரேஸ் போன்றவற்றில் மிகவும் ஆர்வம் கொண்டவர் நடிகை நிவேதா பெத்துராஜ்.

ஒருநாள் கூத்து திரைப்படத்தின் மூலம் சினிமாவில் அறிமுகமானவர் பொதுவாக என் மனசு தங்கம், டிக் டிக் டிக், திமிரு பிடிச்சவன், சங்கத்தமிழன் உள்ளிட்ட திரைப்படங்களில் நடித்துள்ளார்.

அதேசமயம் தெலுங்கிலும் சில ஹிட் படங்களில் நடித்துள்ளார்.

எப்போதும் இன்ஸ்டாவில் மிகவும் ஆக்டீவாக இருக்கும் நிவேதா பெத்துராஜ் சமூகத்தில் நடக்கும் சில விஷயங்கள் குறித்து எப்போதும் பதிவு போடுவார்.

அப்படி அவர் சமீபத்தில் AI தொழில்நுட்பம் குறித்து பதிவு செய்திருக்கிறார். அதில் அவர், அபத்தமான AI வீடியோக்கள் உண்மை போல் காட்சி அளிக்கும் போக்கு மிகவும் மோசமானது.

இது தொடர்ந்தால் எதிர்காலத்தில் மிகவும் ஆபத்தாகிவிடும் என பதிவு செய்துள்ளார்.






நடிகை பிரக்யா நக்ராவின் கவர்ச்சி போட்டோஷூட்.

செம ஹாட் லுக்கில் அவரது போட்டோஷூட் இதோ.

# இயக்குனர் திருமணத்திற்கு தங்க செயின் பரிசளித்த சிவகார்த்திகேயன்!



இயக்குனர் திருமணத்திற்கு தங்க செயின் பரிசளித்த சிவகார்த்திகேயன்!

டூரிஸ்ட் பேமிலி படத்தின் இயக்குனர் அபிஷன் ஜீவிந்த் திருமணம் சமீபத்தில் நடந்தது. அதை தொடர்ந்து நேற்று திருமண வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

அதில் பல பிரபலங்கள் கலந்துகொண்டனர். நடிகர் சிவகார்த்திகேயன் நேரில் சென்று இயக்குனர் அபிஷன் மற்றும் அவரது மனைவிக்கு வாழ்த்து தெரிவித்தார்.

ஏற்கனவே டூரிஸ்ட் பேமிலி படம் ரிலீஸ் ஆன போது அபிஷனை சிவகார்த்திகேயன் தனது ஆபிசுக்கு அழைத்து பாராட்டி இருந்தார். தற்போது அவர் திருமணத்திற்கு தங்கசெயின் பரிசளித்து இருக்கிறார்.

Published by R.S ROSHINE Printed by **R.S. ROSHINE** On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002. and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: **R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: anandabhaskarnews@gmail.com**